*DEPOSITION OF WITNESS*

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

-----

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.***

***CC.No.141/2017*** ***Date:07 /03/2024***

**PW3 (சந்திரசேகர் த/பெ.பெருமாள் கவுண்டர்) குறுக்கு விசாரணை :** மனு எண். / அனுமதிக்கப்பட்டு சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது

**(எதிரி திருஞானசம்பந்தம் ஆஜர், எதிரிகள் செல்லபிள்ளை, கணபதி மற்றும் வெங்கடேசன் ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**இரண்டு மற்றும் மூன்றாம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 14.10.1998 அன்று பிரிவு 81-ன் கீழான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் விசாணை அறிக்கையை மாவட்ட பதிவாளரிடம் 31.05.1999 அன்று தான் தாக்கல் செய்துள்ளார் என்றால்

01.12.1999 அன்று தாக்கல் செய்துள்ளர். அந்த விசாரணை அதிகாரியான முகன் என்பவரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. 24.02.2001 அன்று நான் இந்த வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்து கொண்டேன். அதன் பின்புதான் நான் அவரை விசாரணை செய்துள்ளேன் என்றால் சரிதான். அவருடைய விசாரணை அறிக்கையின் அடிப்படையில்தான் இந்த வழக்கிற்கான முகாந்திரம் உள்ளது என்றால் சரிதான். அந்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில்தான் மகாலிங்கம் என்ற மாவட்ட துணை பதிவாளர் இந்த வழக்கிற்கான புகாரை அனுப்பியுள்ளால் என்றால் சரிதான். அந்த புகாரில் 46 நபர்கள் மொத்தம் எதிரிகளாக காண்பிக்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். அந்த 46 நபர்களில் நான் இறுதி அறிக்கையை 9 நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன். மீதி எதிரிகளை நான் இந்த வழக்கில் இருந்து நீக்கியதற்கு நீக்கல் அறிக்கையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏனென்றால் எங்களது காவல்

துறை தலைவர் (IG) அவர்களின் அறிவுரையின்பேரில் மீதி நபர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட வேண்டும் என கூறியதால் நாங்கள் அவ்வாறு செய்தோம். அவ்வாறான எழுத்துபூர்வமான உத்தரவை இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. ஆனால் வாய்மொழியாக உத்தரவிட்டார். அது இந்த வழக்கிற்கென பிறப்பிக்கப்பட்ட தனி உத்தரவா என்றால் ஆமாம். வழக்கின் ஆவணங்களை பரிசீலித்து வழக்கின் தன்மைக்கேற்ப உத்தரவு பிறப்பித்தார் என்று எந்த வாசகமும் இந்த வழக்கில் இடம்பெறவில்லை என்றால் சரிதான்.

2.புகார்தாரர் மகாலிங்கம் எங்களது வாக்குமூலத்தில் நான் அந்த விசாரணை அறிக்கையை நன்கு பரிசீலனை செய்து 46 நபர்களை எதிரிகளாக சேர்த்துள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. ஏனென்றால் முதலில் பதிவாளர் அனுப்பிய புகாரை காவல் கண்காணிப்பாளர் திருப்பி

JM-PBLR

அனுப்பியதால் மீண்டும் அதை மாவட்ட துணை பதிவாளர் 05.06.2000 அன்று திரும்ப அந்த புகாரை அனுப்பியுள்ளார். மேற்படி வாக்குமூலத்தில் "மேற்படி புகாரில் மோசடி நடைபெற்றுள்ள காலம் ஒவ்வொரு இனங்களிலும் குற்றம்புரிந்துள்ள காலம் குறித்து அனுப்ப வேண்டும் என திரும்ப அனுப்பபப்பட்டுள்ளது" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு திருப்பப்பட்டதாக கூறப்படும் புகார் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என எனக்கு தெரியவில்லை. முதல் புகாரை பெற்ற எங்களது காவல் கண்காணிப்பாளர் அதில் எந்தவித குற்றமும் காணப்படவில்லை என்றுதான் திரும்ப அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. ஏனென்றால் குற்றத்திற்கான காலம் குறித்த விபரித்திற்கு தான் அந்த புகார் திருப்பப்பட்டது. ஏற்கனவே கொடுத்த புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்தால் குற்றம் எதுவும் காணப்படவில்லை என்ற விபரம் தெரியவரும் என்பதால்தான் நாங்கள் அந்த புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்யாமல்

UNPUBLISHED

மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. புகாரை திரும்ப அனுப்பப்பட்ட காரணத்திற்காக நான் அந்த காவல் கண்காணிப்பாளரையோ அல்லது அதன் அலுவலக ஊழியர்களையோ விசாரித்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை. ஆனால் அது சம்பந்தமாக துணை பதிவாளரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன்.

3.என்ன குற்றம் எந்த காலக்கட்டத்தில் நடைபெற்றது என்பது குறித்து எனது இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். யாரோ கொடுத்த அழுத்தத்தினால் இரண்டாவது புகார் கொடுத்தார் என நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இந்த வழக்கை பதிவு செய்வதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்றாலும் சரியல்ல.

4.என்னென்ன பணியாளருக்கு என்னென்ன பொறுப்புகளும் கடமைகளும் நியமிக்கப்பட்டுள்ளது என காண்பிக்கும் எந்த ஆவணத்தையும் இந்த

வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமலை என்பவர் கொடுத்த புகாரில் ஜான் கென்னடி என்பவரின் கணக்கில் பிரச்சனை இருப்பதாகதான் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏனென்றால் அவருடைய கணக்கிலும் ஜான் கென்னடியின் கணக்கிலும் மோசடி ஏற்பட்டதாக கூறியுள்ளார். மீண்டும் சாட்சி பொதுவாக உறுப்பினர்களின் வங்கி கணக்கில் மூன்று இலட்சம் வரை மோசடி நடைபெற்றதாக அந்த புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினரின் முன்னிலையில் செல்லபிள்ளையை அழைத்து விசாரித்ததாகவும், அப்போது சந்திரன், குமார் மற்றும் தலைவர் திருஞானசம்பந்தம் ஆகியோர் இருந்ததாகவும், செல்லபிள்ளை அவரிடம் மோசடி செய்ததற்கு நான்தான் பொறுப்பு என எழுதிக்கொடுத்ததாகவும் திருமலை என்பவர் அவரது வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான். அப்போது இருந்ததாக கூறப்படும் நபர்களையோ அல்லது

UNPUBLISHED

எழுதிக்கொடுத்ததாக கூறப்படும் ஆவணத்தை பற்றியோ இந்த வழக்கில் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். செல்லபிள்ளை எந்த ஆவணத்தையும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும், நான் சாட்சியம் அளித்தபடி அங்கத்தினர்கள் முன்னிலையில் செல்லபிள்ளையை விசாரிக்கவில்லை என்றாலும், இந்த வழக்கை வலுப்படுத்துவதற்காக இவ்வாறு கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. தலைவருக்கு அன்றாட நடவடிக்கையில் எந்தவித பொறுப்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் எந்த ஆவணத்திலும், தலைவரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

5.முதல் இறுதி அறிக்கையில் செல்லப்பிள்ளை ரூ.10 ஆயிரம் எடுத்துக்கொண்டதாக கூறியுள்ளோம் என்றாலும் அதில் கணபதி மற்றும் திருஞானசம்பந்தத்திற்கு தொடர்பு உண்டு என்பதை காண்பிப்பதற்கு எந்த

ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏனென்றால் செல்ப் செக் மூலமாக செக்கரட்ரி தனிப்பட்ட முறையில் பணத்தை எடுத்திருந்தாலும், மீண்டும் வரவு செலவுகளை பார்க்கும்போது இரண்டு மற்றும் மூன்று எதிரிகளுக்கு அவர் செய்த தவறு தெரிந்திருக்கும். அதனால் அவர்கள் உடந்தையாக செயல்பட்டுள்ளனர்.

6.இரண்டாம் இறுதி அறிக்கையில் 02.06.1998 அன்று செல்லப்பிள்ளை ரூ.20 ஆயிரம் எடுத்துக்கொண்டதாக கூறியுள்ளோம் என்றாலும் அதில் கணபதி மற்றும் திருஞானசம்பந்தத்திற்கு தொடர்பு உண்டு என்பதை காண்பிப்பதற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏனென்றால் செல்ப் செக் மூலமாக செக்கரட்ரி தனிப்பட்ட முறையில் பணத்தை எடுத்திருந்தாலும், மீண்டும் வரவு செலவுகளை பார்க்கும்போது

இரண்டு மற்றும் மூன்று எதிரிகளுக்கு அவர் செய்த தவறு தெரிந்திருக்கும். அதனால் அவர்கள் உடந்தையாக செயல்பட்டுள்ளனர்.

7.மூன்றாவது மற்றும் நான்காவது இறுதி அறிக்கைகளில் கரும்புக்கடன் சம்பந்தப்பட்டது என்றாலும் சர்க்கரை ஆலையில் அனுமதிக்கப்பட்ட கடன் அளவை விட திருத்தி கூடுதலாக பணம் எடுத்துள்ளனர் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடன் வழங்குவதற்கு முன்வு பொதுவாக தீர்மானம் இயற்றி அதை மத்திய கூட்டறவு வங்கியின் பணியாளர்கள் பரிசீலணை செய்து ஏற்றுக்கொணட பிறகு தான் கடன் வழங்கப்படும் என்றால் சரியல்ல. ஏனென்றால் தீர்மானம் இயற்றிய பின்பு கள அலுவலர் தயார் செய்து வைத்திருந்த அறிக்கைகளில் செயலாளர் செல்லப்பிள்ளை திருத்தி கூடுதலாக பணம் பெற்றுள்ளார். அதற்கு தலைவர் எந்தவிதத்திலும் பொறுப்பிள்ளை என்றால் சரியல்ல. ஏனென்றால் அவர் அனைத்து நடவடிக்கைகளுக்கும்

கூட்டு பொறுப்பாவார். கூட்டுபொறுப்பு உண்டு என்பதை காண்பிக்கும் சங்கத்தின் துணை விதி எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8.ஒன்பது மற்றும் பத்தாவது இறுதி அறிக்கையில், சேமிப்பு கணக்கில் குறைபாடு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த இறுதி அறிக்கையில் வெங்கடேசன் என்பவர் தினக்கூலி அடிப்படையில் இந்த சங்கத்தில் பணியாற்றியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் பணியாற்றியபோது, அவருக்கு என்ன கடமைகளும், பொறுப்புகளும் ஒதுக்கப்பட்டது என்றும், சேமிப்பு கணக்கை அவர் கையாண்டர் என்பதை காண்பிக்கும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9.அங்கத்தினர்களின் சேமிப்பு கணக்கு பாஸ்புத்தகத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். கூடுதலாக பணம்

கொடுக்கப்பட்டதாக பாஸ் புக்கில் பதிவு செய்யப்பட்டபோது, உள்ள கையொப்பத்தையும் எதிரிகளின் கையொப்பத்தையும், ஒப்பிட்டு பார்க்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பிரிவு 81-ன் கீழான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்க் எதுவும் என்னிடம் உரிய நேரத்திற்குள் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். பிரிவு 81-ன் கீழான விசாரணை அறிக்கை உரிய காலக்கட்டத்திற்குள் தயார் செய்யப்படவில்லை என்பதால்தான் என்னிடம் ஆவணங்கள் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஏனென்றால் அந்த ஆவணங்கள் எங்களிடம் நேரடியாக ஒப்படைக்க மாட்டார்கள் அவர்களது துறை சார்ந்த உயர் அதிகாரிகளிடம்தான் ஒப்படைப்பார்கள். அந்த ஆவணங்கள் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்பதால்தான் காலதாமதமாக என்னிடம் ஒப்படைத்துள்ளனர் என்றால் சரிதான். தலைவருக்கு நேரடியாக சங்கத்தில் எந்த பொறுப்பும் கிடையாது என்பதால் அவர்மீது நான் தாக்கல் செய்துள்ள

PUBLIC

இந்த அறிக்கை சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தினக்கூலியான வெங்கடேசனுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கணபதியும் தினக்கூலியாகதான் அந்த காலக்கட்டத்தில் பணிபுரிந்துள்ளார் என்றால் சரிதான். அவருக்கும் என்னென்ன பொறுப்புகள் கொடுக்கப்பட்டது என்றும், என்னென்ன ஆவணங்களை கையாண்டார் என்பதை காண்பிக்கும் ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளித்தபடி விசாரணையை சரியாக மேற்கொள்ளாமல் எனது அலுவலகத்தில் வைத்தே ஆவணங்களை தயார் செய்த கொண்டேன் என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>**முதலாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

UNPUBLR

மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கூறியதால் அது

அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*Taken down by / before me in open court*
*read over/interpreted to the witness*
*in the presence of the accused/accused/*
*pleader and admitted by the witness to*
*be correct.*

*sd/-*

*Judicial Magistrate No.I,*

*Perambalur.*

JM-I, PBLR